பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**15 03 2026 SUNDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மேற்கு வங்க சட்டப்பேரவைக்கு இரண்டு கட்டங்களாகவும், தமிழகம், கேரளா, அஸ்ஸாம் மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவைக்கு ஒரே கட்டமாகவும் தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

1. தேர்தல் நடைபெறவுள்ள மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசத்தில் நடத்தை நெறிமுறைகள் அமலுக்கு வந்துள்ளதாக தலைமை தேர்தல் ஆணையர் திரு **Gyanesh Kumar** தெரிவித்துள்ளார்.

2. நாடு முழுவதும் சமையல் எரிவாயு விநியோகம் சீராக நடைபெற்று வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

3. நேபாளத்தில் நேரிட்ட சாலை விபத்தில் இந்தியாவை சேர்ந்த 7 பேர் உயிரிழந்தனர்.

4. அமெரிக்காவில் நடைபெற்றுவரும் சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் செல்வ பிரபு வெள்ளிப்பதக்கம் வென்றார்.

- இனி விரிவான செய்திகள் —

<<<<<<>>>>>>

மேற்குவங்க சட்டப்பேரவைத் தேர்தல் இரண்டு கட்டங்களாகவும், தமிழகம், கேரளா, அஸ்ஸாம் மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தல்கள் ஒரே கட்டமாகவும் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இன்று புதுதில்லியில் சட்டப்பேரவைத் தேர்தல்களுக்கான அட்டவணையை தலைமை தேர்தல் ஆணையர் திரு **Gyanesh Kumar** வெளியிட்டு பேசினார்.

மேற்குவங்க சட்டப்பேரவைத் தேர்தலுக்கான முதல் கட்ட வாக்குப்பதிவு **152** தொகுதிகளில் அடுத்த மாதம் **23-**ஆம் தேதியும், இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு **142** தொகுதிகளில் **29-**ஆம் தேதியும் நடைபெறும் என்று அவர் கூறினார்.

முதல் கட்ட தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் வரும் **30-**ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் **6-**ஆம் தேதி வரை நடைபெறும் என்று அவர் கூறினார்.

அதற்கு மறுநாள் மனுக்கள் மீதான பரிசீலனை மேற்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்தார்.

மனுக்களை விலக்கிக்கொள்ள அடுத்த மாதம் 9-ஆம் தேதி கடைசிநாளாகும் என்றும் அவர் கூறினார்.

இரண்டாம் கட்ட தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் அடுத்த மாதம் 2-ஆம் தேதி தொடங்கி, 9-ஆம் தேதிவரை நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

அதற்கு மறுநாள் மனுக்கள் மீதான பரிசீலனை நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

மனுக்களை விலக்கிக்கொள்ள 13-ஆம் தேதி கடைசி நாளாகும் என்றும் அவர் கூறினார்.

அஸ்ஸாம், கேரளா, மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தல் ஒரே கட்டமாக அடுத்த மாதம் 9-ஆம் தேதி நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

இதற்கான வேட்புமனு தாக்கல் நாளை தொடங்கி, வரும் 23-ஆம் தேதிவரை நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதற்கு மறுநாள் மனுக்கள் மீதான பரிசீலனை மேற்கொள்ளப்படும் என்றும், மனுக்களை விலக்கிக்கொள்ள 24-ஆம் தேதி கடைசி நாளாகும் என்றும் அவர் கூறினார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் அடுத்த மாதம் 23-ஆம் தேதி நடைபெறும் என்றும் இதற்கான வேட்புமனு தாக்கல் வரும் 30-ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் 6-ஆம் தேதிவரை நடைபெறும் என்று அவர் கூறினார்.

அதற்கு மறுநாள் மனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

வேட்புமனுக்களை விலக்கிக்கொள்ள 9-ஆம் தேதி கடைசிநாளாகும் என்றும் அவர் கூறினார்.

தமிழகம், கேரளா, மேற்குவங்கம், அஸ்ஸாம் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேச சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகள் மே மாதம் 4-ஆம் தேதி எண்ணப்படும் என்றும் தலைமை தேர்தல் ஆணையர் தெரிவித்தார்.

விரிவான ஆலோசனைகளுக்கு பிறகே தேர்தல் தேதிகள் இறுதி செய்யப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இதுதொடர்பாக, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் காவல்துறை உயரதிகாரிகளுடன் விரிவான ஆலேசானை மேற்கொண்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நான்கு மாநிலம் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேச சட்டப்பேரவைத் தேர்தலில் 17 கோடியே 40 லட்சம் வாக்காளர்கள் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்காக, 2 லட்சத்து 19 ஆயிரம் வாக்குச்சாவடி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மேற்குவங்கத்தை பொறுத்தவரை 6 கோடியே 45 லட்சத்து 61 ஆயிரத்து 152 வாக்காளர்களும், தமிழகத்தில் 5 கோடியே 67 லட்சத்து 74 ஆயிரத்து 436 வாக்காளர்களும், கேரளாவில் 2 கோடியே 71 லட்சத்து 6 ஆயிரத்து 59 வாக்காளர்களும், அஸ்ஸாமில் 2 கோடியே 50 லட்சத்து 22 ஆயிரத்து 408 வாக்காளர்களும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் ஒன்பது லட்சத்து 44 ஆயிரத்து 539 பேரும் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ளதாக தெரிவித்தார்.

தேர்தல் நடவடிக்கைகளில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்காக 30 புதிய முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கூறிய அவர், அவற்றை பட்டியலிட்டார்.

அனைத்து வாக்குச்சாவடிகளிலும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஒரு வாக்குச்சாவடியில் ஆயிரத்து 200 வாக்காளர்கள் மட்டுமே இடம்பெறுவார்கள் என்றும் அவர் கூறினார்.

வாக்காளர்களுக்கு தேவையான வசதிகளும் வாக்குச்சாவடிகளில் ஏற்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

இதுகுறித்து விரிவான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வாக்காளர்கள் வாக்குச்சாவடி செல்வதற்குமுன் மொபைல் போன்களை ஒப்படைப்பதற்கான வசதியும் ஏற்படுத்தப்படும் என்று அவர் தெரிவித்தார்

தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுள்ளதையடுத்து, நடத்தை நெறிமுறைகள் உடனடியாக செயல்பாட்டிற்கு வருவதாகவும் அவர் கூறினார்.

தேர்தல் நடத்தை நெறிமுறைகளை அரசியல் கட்சிகள் முழுமையாக பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்ட அவர், மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்தார்.

தேர்தலில் பணபலம் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

வாக்குப்பதிவு அமைதியாக நடைபெறுவதை உறுதி செய்வதற்கு தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக திரு **Gyanesh Kumar** தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

நாடு முழுவதும் சமையல் எரிவாயு விநியோகம் சீராக நடைபெற்று வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

சிலிண்டருக்காக முன்புதிவு செய்பவர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாக பெட்ரோலியத் துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

சமையல் எரிவாயு சிலிண்டர் கோரி நேற்று முன்தினம் **82** லட்சம் முன்பதிவு செய்யப்பட்டதாகவும், அது நேற்று **77** லட்சமாக குறைந்துள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வணிக பயன்பாட்டிற்கான சிலிண்டர்களின் விநியோகத்தை மாநில அரசுகள் மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

இதேபோல், பெட்ரோல் நிரப்பும் மையங்களும் சீராக செயல்பட்டு வருவதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

தமிழகத்தின் சேலம் மாவட்டம் ஏற்காட்டில் கோடை விழாவிற்கான முன்னேற்பாட்டுப் பணிகள் தீவிரமடைந்துள்ளன.

ஆயிரக்கணக்கான தொட்டிகளில் மலர்கள் நடவு செய்யும் பணி நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte — விஜய்குமார் - 56 Sec.)*

<<<<<<>>>>>>

நேபாளத்தில் நேரிட்ட சாலை விபத்தில் இந்தியாவை சேர்ந்த 7 பேர் உயிரிழந்தனர்.

**Gorkha** மாவட்டத்துக்கு உட்பட்ட பகுதியில் சென்று கொண்டிருந்த பேருந்து, நிலைதடுமாறி பள்ளத்தாக்கில் கவிழ்ந்து விழுந்ததில் இந்த விபத்து நேரிட்டதாக அந்நாட்டு காவல்துறையினர் தெரிவித்தனர்.

இந்த பேருந்தில் இந்தியாவை சேர்ந்த **16** பேர் பயணித்ததாகவும் அவர்கள் கூறினர்.

உயிரிழந்தவர்களில் இரண்டு பேர் பெண்கள் என்றும், காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் காவல்துறையினர் தெரிவித்தனர்.

<<<<<<>>>>>>

ரஷ்யா மீது, யுக்ரைன் ட்ரோன் தாக்குதல் நடத்தி வருகிறது.

இருப்பினும், ரஷ்ய வான் பாதுகாப்பு கட்டமைப்பு, யுக்ரைன் ட்ரோன்களை அழித்ததாக அந்நாட்டின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**28** ட்ரோன்கள் அழிக்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ட்ரோன் தாக்குதல் காரணமாக ரஷ்யாவின் நான்கு நகரங்களில் விமான சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

ஆஸ்திரேலியாவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ராணுவத்தினர் நிவாரணப்பணிகளை மேற்கொள்வார்கள் என்று அந்நாட்டு பிரதமர் திரு **Anthony Albanese** கூறியுள்ளார.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப்பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறியுள்ளார்.

மேலும், இப்பணிகளுக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் ராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் அரசு வழங்கும் என்றும் திரு **Anthony Albanese** கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

## *விளையாட்டுச் செய்திகள்*

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் செல்வ பிரபு வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ஆடவர் **Triple Jump** பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

---------------

**19** வயதுக்கு உட்பட்டோருக்கான உலக **Futures** கோப்பை குத்துச்சண்டை போட்டியில் இந்தியா ஒரு தங்கம் **3** வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

பாங்காக்கில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் **51** கிலோ எடைப்பிரிவில் **Chandrika Bhoreshi Pujari** தங்கப்பதக்கம் வென்றார்.

மகளிர் **48** கிலோ எடைப்பிரிவில் **Gunjan-**னும், **54** கிலோ எடைப்பிரிவில் **Joyshree Devi Chirom-**மும், ஆடவர் **50** கிலோ எடைப்பிரிவில் **Ambekar Meetei Lairenlakpam-**ம் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

மகளிர் **57** கிலோ எடைப்பிரிவில் **Radhamani Longjam** வெண்கலப்பதக்கம் வென்றார்.

---------

கிரிக்கெட் போட்டியில் சாதனை படைத்தவர்களுக்கான கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் விருதுகள் இன்று புதுதில்லியில் வழங்கப்பட உள்ளன.

---------------

ஆசிய நடைபோட்டி ஜப்பானின் **Nomi-**ல் இன்று தொடங்கியது.

**<<<<<<END>>>>>>**